## 7 சட்டமன்றத் தொகுதிகளில்

# ‘தமிழ்நாடு தலைகுனியாது’ பரப்புரை!

## கழக வெற்றிக்கு - மக்கள் திரள் ஆதரவு!








**சென்னை, பிப்.20-**

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் தமிழ்நாடு சட்டப்பேரவை தேர்தலை திறம்பட எதிர்கொண்டு வெற்றி வாகை சூடும் பொருட்டு , கழகத்தின் சார்பில் 234 தொகுதிகளிலும் தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரைக் கூட்டத்தை அறிவித்தார். 24 கழக நட்சத்திர பேச்சாளர்களுடன் பிப்ரவரி 1 ஆம் தேதி தொடங்கிய பரப்புரையானது 100 சட்டமன்ற தொகுதிகளைக் கடந்து வெற்றி பரப்புரையாக தொடர்ந்து வருகிறது.

திராவிடமாடல் அரசின் சரித்திர சாதனைகளை மக்களிடம் விளக்கியும், ஒன்றிய பாஜக அரசு மற்றும் அதன் அடிமைக் கூட்டணி தமிழ்நாட்டு மக்களுக்குச் செய்து வரும் வஞ்சகத்தை மக்கள் முன்பு எடுத்துரைத்தும் கழகத்தின் சார்பில் தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரையானது நடைபெற்று வருகிறது.

(18.02.2026) அன்று பரப்புரைக் கூட்டமானது 7 சட்டமன்ற தொகுதிகளில் மிகுந்த எழுச்சியோடு நடைபெற்றது.

அண்ணாநகர் தொகுதியில் திருமதி.கனிமொழி சோமு அவர்கள் செய்யூர் தொகுதியில் திரு.கடலூர் புகழேந்தி அவர்கள், பெருந்துறை தொகுதியில் திரு.கார்த்திகேய சிவசேனாபதி அவர்கள், கோபிசெட்டிபாளையம் தொகுதியில் திரு. தயாநிதி மாறன் அவர்கள் சிதம்பரம் தொகுதியில்திண்டுக்கல் ஐ லியோனி அவர்கள். வேதாரண்யம் தொகுதியில் திரு. கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் அவர்கள்,

ஈரோடு கிழக்கு தொகுதியில் திரு.கம்பம் செல்வேந்திரன் அவர்கள் சிறப்பு பேச்சாளர்களாக கலந்து கொண்டு அனல் பறக்க பரப்புரை மேற்கொண்டனர்.

ஒன்றிய பாஜக அரசும் அதன் அடிமை அதிமுகவும் தேர்தலை காரணம் காட்டி மக்களுக்கான நலத்திட்டங்களை முடக்க முயன்றதைத் தடுக்கும் விதமாக மூன்று மாத மகளிர் உரிமை தொகை 3000 உடன் 2000 ரூபாய் சிறப்பு நிதி என 5000 ரூபாயை முன் கூட்டியே அள்ளி வழங்கிய முதலமைச்சர் அவர்களுக்கு தமிழ்நாடு முழுக்க அசைக்க முடியாத ஆதரவு அலை உருவாகி உள்ளதை அலைகடலாய் திரண்ட மக்கள் வெள்ளம் சாட்சி கூறியது.

நலத்திட்டங்களை நிறுத்த முயலும் டெல்லி டப்பா எஞ்சின் கூட்டணியா இல்லை நலத்திட்டங்களை வழங்கி வளர்ச்சியை மீட்டெடுத்த முதலமைச்சர் ஸ்டாலின் அவர்களின் தமிழ்நாடு அணியா.? என பேச்சாளர்கள் கேட்க ஸ்டாலின்...ஸ்டாலின் என கூட்டம் ஆராவாரம் செய்தது

---

### ரூ.696 கோடியே 55 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட

## 4035 புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகளை முதல்வர் திறந்து வைக்கிறார்!

### அமைச்சர்கள் தா.மோ. அன்பரசன் —மா.சுப்பிரமணியன் ஆய்வு!



*சென்னை,பிப்.20-*

*குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் நேற்று (19.2.2026) தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கோட்டூர்புரம் திட்டப்பகுதியில் ரூ.307.24 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் 1800 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளின் கட்டுமான பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.*

*அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்கள் பேசுகையில் குடிசைப் பகுதியில் வாழும் மக்கள் கான்கீரிட் வீடுகளில் வாழ வேண்டும் என்ற நல்ல நோக்கில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் குடிசைப் பகுதி மாற்று வாரியம் 1970 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு கோட்டூர்புரம் பகுதியில் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டு வழங்கப்பட்டது. மறுகட்டுமான திட்டத்தின் கீழ் இங்கு இருந்த 1476 குடியிருப்புகள் இடிக்கப்பட்டு 1800 குடியிருப்புகள் தூண் மற்றும் 6 தளங்களுடன் கட்டப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது.*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் 2.3.2026 அன்று சென்னையில் ஆயிரம் விளக்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தாமஸ் ரோடு பகுதி 1 மற்றும் 2 திட்டப்பகுதியில் 77 கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவில் 470 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள், பெரிய பாளையத்தம்மன் கோயில் திட்டப்பகுதியில் 5 கோடியே 72 இலட்சம் ரூபாய் செலவில் 32 புதிய அடுக்குமாடி குடியிருப்பு கள், சுபேதார் கார்டன் பகுதி 1 மற்றும் 2 திட்டப்பகுதியில் 57 கோடியே 32 இலட்சம் ரூபாய் செலவில் 300 புதிய அடுக்குமாடி குடியிருப்பு கள், அப்பாசாமி முதலி தெரு திட்டப்பகுதியில் 12 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில் 68 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள்*

*மயிலாப்பூர் சட்டமன்றத் தொகுக்குட்பட்ட வன்னியபுரம் திட்டப்பகுதியில் 36 கோடியே 92 இலட்சம் ரூபாய் செலவில் 216 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள், குயில் தோட்டம் திட்டப்பகுதியில் 65 கோடியே 2 இலட்சம் ரூபாய் செலவில் 384 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள்,*

*சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுக்குட்பட்ட கோட்டூர்புரம் திட்டப்பகுதியில் 307 கோடியே 24 இலட்சம் ரூபாய் செலவில் 1800 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள், அப்பாவு நகர் சுப்புபிள்ளை தோட்டம் திட்டப்பகுதியில் 88 கோடியே 5 இலட்சம் ரூபாய் செலவில் 522 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள்,*

*ராயபுரம் சட்டமன்றத் தொகுக்குட்பட்ட செட்டி தோட்டம் திட்டப்பகுதியில் 45 கோடியே 63 இலட்சம் ரூபாய் செலவில் 243 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள், என மொத்தம் 9 திட்டப்பகுதியில் ரூ.696 கோடியே 55 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட 4035 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைக்க உள்ளார்கள்.*

*மேலும் துணை முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் 28.2.2026 அன்று சென்னை சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நாவலர் நெடுங்செழி யன் நகர் சிந்தாதரிப்பேட்டை திட்டப்பகுதியில் 77 கோடியே 5 இலட்சம் ரூபாய் செலவில் 450 புதிய அடுக்குமாடி குடியிருப்பு கள், கொய்யாத் தோப்பு திட்டப்பகுதியில் 61 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் 324 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள், காக்ஸ் குடியிருப்பு திட்டப்பகுதி யில் 14 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் 78 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள் என மொத்தம் 3 திட்டப்பகுதியில் ரூ.152 கோடியே 45 இலட்சம் மதிப்பீட்டில் 852 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளை திறக்க உள்ளார்கள்.*

*கடந்த கால ஆட்சியில் 27628 குடியிருப்புகள் மட்டுமே கட்டப்பட்டது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றது முதல் இன்று வரை ரூ.7932 கோடியே 79 இலட்சம் மதிப்பீட்டில் 66,755 குடியிருப்புகள் கட்டப்பட்டு உள்ளது. கடந்த கால ஆட்சியில் 6417 குடியிருப்புகள் மட்டுமே பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் தற்போது இந்த 5 வருடத்தில் 61,526 குடியிருப்புகள் ஏழை எளிய மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என தெரிவித்தார்.*

*இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் திருமதி ஸ்ரேயா பி. சிங் அடையார் மண்டல குழு தலைவர் ஆர்.துரைராஜ் தலைமை பொறியாளர் வி.எஸ்.கிருஷ்ணசாமி, மேற்பார்வை பொறியாளர் திருமதி ஆர். பிரமிளா, நிர்வாக பொறியாளர் விஜய்ஆனந்த் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.*



கழக ஆதிதிராவிடர் நலக்குழு நிர்வாகிகள் கூட்டம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் மாநில செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார். இதில் மாநில நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள்!

## பொதுக்கூட்டங்கள் - நலத்திட்ட உதவிகள்!

### கழக ஆதிதிராவிடர் நலக்குழு மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

*சென்னை, பிப். 19 -*

*முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை யொட்டி பொதுக்கூட்டங்கள் நடத்தி நலத்திட்ட உதவிகள் வழங்கிட கழக ஆதிதிராவிடர் நலக்குழு மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.*

*தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாநில நிர்வாகிகள் கூட்டம் சென்னை, அண்ணா அறிவாலயத்திலுள்ள கழக அலுவலகத்தில் தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழுத் தலைவர் மருதூர் ஏ.இராமலிங்கம் தலைமையில், துணைத் தலைவர் அமைச்சர் மா.மதிவேந்தன், இணைச் செயலாளர்கள் புஷ்பராஜ், முன்னாள் எம்.எல்.ஏ., வி.பி. இராஜன், திப்பம்பட்டி ஆறுச்சாமி, துணைச் செயலாளர்கள் பா. துரைசாமி, மு.பொன்தோஸ், மு. பரமானந்தம், சி. தசரதன், சா. இராசேந்திரன், மாரியப்பன் கென்னடி, முன்னாள் எம்.எல்.ஏ., கொ. ரமேஷ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.*

*இக்கூட்டத்தில் தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழுச் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ., அவர்கள் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாளினை எழுச்சியுடன் சிறப்பாக கொண்டாடுவது குறித்தும் - நடைபெற உள்ள சட்டப் பேரவைத் தேர்தலில் ஆதிதிராவிடர் நலக்குழு நிர்வாகிகள் பணியாற்றுவது குறித்தும் விளக்காமாக உரையாற்றினார்.*

*சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு, சென்னை கிழக்கு, சென்னை மேற்கு, சென்னை தென் மேற்கு, சென்னை தெற்கு, திருவள்ளூர் கிழக்கு, திருவள்ளூர் மத்திய, திருவள்ளூர் மேற்கு, காஞ்சிபுரம் வடக்கு, காஞ்சிபுரம் தெற்கு, ஆகிய மாவட்டங்களின் ஆதிதிராவிடர் நலக்குழு மாவட்ட அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.*

*இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு:*

#### தீர்மானங்கள்

*மார்ச் 1-ல், 73வது அகவை காணும் நமது கழக தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் விழாவினையொட்டி, ஆதிதிராவிடர் நலக்குழு சார்பில் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், பகுதி மற்றும் வார்டுகளில் கழக இருவண்ண கொடியேற்றி, இனிப்புகள் வழங்கி கொண்டாட வேண்டும், மேலும் ஆதிதிராவிடர் மக்கள் வசிக்கும் பகுதிகளில் பொதுக் கூட்டங்கள், தெருமுனைப் பிரச்சாரங்கள் நடத்தி நலத்திட்ட உதவிகள் வழங்க வேண்டுமென இக்குழு தீர்மானிக்கிறது.*

*பெரும்பான்மை விளிம்புநிலை மக்களுக்கு பிப்ரவரி மார்ச் ஏப்ரல் மாதத்திற்கான ரூ.1000 வீதம் ரூ.3000 மற்றும் கோடைகால சிறப்பு தொகை ரூ. 2000 என மொத்தமாக ரூ.5000 வழங்கி குடும்பத் தலைவிகளுக்கு இன்பம் பொங்க மகிழ்ச்சி தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியினை இக்கூட்டம் தெரிவித்துக் கொள்கிறது.*

*ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக்காக போராடிய தியாகி இம்மானுவேல் சேகரனார் அவர்களின் பிறந்தநாளை அரசு விழாவாக அறிவித்து, 17.01.2026 அன்று பரமக்குடியில் ரூ. 3 கோடி மதிப்பீட்டில் மணிமண்டபம் மற்றும் ஆளுயர திருவுருவ வெங்கல சிலை அமைத்த கழக தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு இக்கூட்டம் தனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.*

*ஒன்றிய பட்ஜெடில் தமிழ்நாட்டை புறக்கணித்து, தமிழ்நாட்டிற்கு தொடர் துரோகம் - மதவாத கலக அரசியல் நடத்தும் மற்றும் ஒன்றிய பட்ஜெட்டில் அநீதி இழைத்த பாசிச பா.ஜ.க அரசுக்கு இக்கூட்டம் தனது கண்டனத்தை தெரிவித்துக்கொள்கிறது.*

*கழக ஆதிதிராவிட நலக்குழு துணைச் செயலாளராக திரு. என்.சிவகுமார் (மதுரை) அவர்களை நியமனம் செய்த கழக தலைவர் அவர்களுக்கும் வருங்கால தமிழகம் சின்னவர் அவர்களுக்கும், கழக பொது செயலாளர் அவர்களுக்கும் இக்கூட்டம் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறது*

*இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.*